2020 ஜனவரி 8]

அவை கண்டறியப்பட்டு, mapping *செய்யப்பட்டு வருகிறது. ஒரு தனியார் தொழில் தொடங்கிட முன் வந்தால், அவரே போய் ஒரு ஹெக்டேர்* land *வாங்கி, எல்லாவிதமான* infrastructure*–ஐயும் அவர்களாகவே* develop *செய்திட வேண்டும். அப்படி இல்லாமல்* SIDCO, SIPCOT *மாதிரி, முழுமையான அளவிற்கு* land*–ஐ* acquire *செய்து, அதன்பிறகு குறிப்பிட்ட பகுதியில், ஒரு ஹெக்டேர், இரண்டு ஹெக்டேர் என்று பிரித்து, அங்கு* infrastructure*–அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, அதன்மூலம் அவர்களுக்கு* technology *கொடுத்து,* bank loan *கொடுத்து,* subsidy *கொடுத்து, அவர்களை ஒரு தொழில்முனைவோராக ஆக்க வேண்டுமென்ற அந்தப் பரிசீலனையும் அரசினுடைய கவனத்தில் இருக்கின்றது.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

நீதிமன்றம்

***47212—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சியில் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியிலே ஒரு நீதிமன்றம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மொடக்குறிச்சி தொகுதியில் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று எந்தப் பரிந்துரையும் உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 ஜனவரி 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். அம்மாவின் வழியிலே இன்றைக்கு தமிழகத்தைச் சீரோடும், சிறப்போடும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட இரண்டு ஒன்றியங்களுக்கும் இரண்டு தாலுகாக்கள் அறிவிக்கப்பட்டன. அந்த இரண்டு தாலுகாக்களும் அம்மாவின் வழியில் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்று, மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் ஏற்கெனவே நீதிமன்றம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஈரோடுக்கு அருகிலுள்ள மொடக்குறிச்சியில் நீதிமன்றம் அமைப்பதற்குத் தேவையான இடமும் தேர்வு செய்யப்பட்டு, மக்கள் அதை வழங்குவதற்கும் தயாராக உள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிமன்றம் அமைக்க மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், நீதிமன்றம் அமைப்பது குறித்து தற்போது நாங்கள் விண்ணப்பமாகக் கொடுத்துள்ளோம். அது கூடியவிரைவிலே அரசுக்கு வந்து சேரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அந்த விண்ணப்பம் வந்தவுடன், தனி court—ஆகவோ அல்லது ஈரோட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற Municipal Court—ல் ஏதாவது ஒன்றை, மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு மாற்றித் தர ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு நீதிமன்றம் உருவாக்கப்பட

2020 ஜனவரி 8]

வேண்டுமென்றால், Constitution of Court என்றால், அரசாங்கமே அமைத்துவிட முடியாது. நீதிமன்றத்தினுடைய பரிந்துரை அவசியம். மொடக்குறிச்சி பகுதியிலே நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். மொடக்குறிச்சி பகுதியில் இருக்கின்ற வழக்குகள், ஈரோட்டில் இருக்கின்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, உயர் நீதிமன்றம்தான் அந்தப் பகுதியில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன என்ற எண்ணிக்கையையெல்லாம் கணக்கில் எடுத்து, நடவடிக்கையை எடுக்கும்.வழக்குகளின்எண்ணிக்கைஅதிகமாகஇருக்கின்றபட்சத்தில், அங்கிருக்கின்ற மாவட்ட நீதிபதியிடம் உங்களுடைய வழக்கறிஞர் சங்கத்தின் மூலமாக மனுவைக் கொடுத்து, மாவட்ட நீதிபதி மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரையை அனுப்பி வைக்க வேண்டும். உயர் நீதிமன்றம் அதற்கென்று ஒரு குழுவை வைத்திருக்கிறது. அந்தக் குழுவினுடைய பரிந்துரை அரசுக்கு வரப்பெற்றால்தான் புதிதாக நீதிமன்றங்கள் உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற மொடக்குறிச்சி பகுதி, புதிதாக உருவாக்கப்பட்ட தாலுகா. மாண்புமிகு அம்மாவினுடைய அரசால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களால் 2017–லே முக்கியமான ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்கப்பெற வேண்டும்; மக்களுக்கு அருகிலேயே நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற உயர்ந்த கொள்கையின் அடிப்படையில், நீதிமன்றங்களே இல்லாத தாலுகாக்கள் எவை எவை என கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட தாலுகாக்களில் புதிய நீதிமன்றங்களைத் திறப்பதற்கு ஒரு கொள்கையை உருவாக்கி, அதன்மூலம் உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, 2017–ல் 51 புதிய தாலுகா நீதிமன்றங்கள் மூன்று கட்டங்களாக உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டது. மேலும், ஓராண்டுக்கு 17 நீதிமன்றங்கள் உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதிலே முதல் கட்டமாக 17 நீதிமன்றங்களை அமைக்க அரசு முடிவெடுத்தது. இப்போது அதற்கான நீதிபதிகள் பணியமர்த்தப்பட்டு, நீதிமன்றங்கள் திறக்கப்பட்டுவிட்டன.

இதிலே என்ன குறிப்பிட வேண்டுமென்றால், நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று சொன்னபோது, சிறு வழக்குகளை மட்டும்தான் அவை விசாரிக்கும் என்று சொல்லி அறிவிக்கப்பட்டது.

ஆனால், அதற்குப் பிறகு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக அவற்றை மாற்றி, இப்போது அந்த நீதிமன்றங்கள் செயல்படுவதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, அந்த வகையில் 17 நீதிமன்றங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன. இரண்டாவது கட்டமாக ஆரம்பிக்கப்படவிருக்கின்ற நீதிமன்றங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நீதிமன்றத்தில் இருக்கின்ற நீதியரசர்கள், நாங்கள் கூட்டத்திற்குச் செல்கின்றபோது எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை; வாடகை இடத்தை உடனடியாக நீங்கள் ஏற்பாடு செய்து கொடுத்தால் நீதிமன்றத்தைத் திறப்பதாகச் சொன்னார்கள். எனவே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நாங்கள் தாம்பரத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது, 'செய்யூரிலே நீதிமன்றம் திறக்கப்பட வேண்டும். அதற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நீங்கள் வாடகைக் கட்டடத்தைப் பாருங்கள்' என்று சொன்னார்கள். நாங்கள்கூட சொல்லியிருக்கின்றோம். அதேபோன்று, பல்லாவரத்திலே நீங்கள் இடத்தைப் பார்த்துக் கொடுத்தால், இரண்டாவது கட்டத்திற்கான நீதிமன்றங்களைத் திறப்பதற்கும் உயர் நீதிமன்றம் தயாராக இருக்கிறது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: நீதிபதிகள் பற்றாக்குறை இருந்த காரணத்தால்தான் அந்த நீதிமன்றங்கள் செயல்பட முடியாமல் இருந்தன. தண்டராம்பட்டில்கூட இது சம்பந்தமான கேள்வி வந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் 225 புதிய நீதிபதிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் இப்போது பணியமர்த்தப்பட்டு விட்டார்கள். ஆகவே, நீதிபதிகளை அந்த இடத்திலே பணியமர்த்துவதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையென்று சொல்லி, இப்போது நீதிபதிகளை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். 51 நீதிமன்றங்கள் மட்டுமல்லாமல், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் கூடுதலாக 5 தாலுகா நீதிமன்றங்களை விக்கிரவாண்டி, காரியமங்கலம், சிங்கம்புணரி, மதுரவாயல், பல்லாவரம் ஆகிய இடங்களில் அமைப்பதற்கு அறிவிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் விக்கிரவாண்டியில் நீதிமன்றம்

2020 ஜனவரி 8]

திறக்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற மொடக்குறிச்சி, புதிய தாலுகாவாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கிருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கையை மாவட்ட நீதிபதியின் மூலமாகப் பெற்று, உரிய பரிந்துரையோடு உயர் நீதிமன்றத்திற்கு கருத்துரு வரப் பெற்றால், மொடக்குறிச்சி புதிய தாலுகா என்பதால், கண்டிப்பாக அங்கே நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொடக்குறிச்சியில் நீதிமன்றம் அமைக்க ஆவன செய்யப்படும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்ததற்கு தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன். நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பவானிசாகர் தொகுதியில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலத்தில் உள்ள நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, சத்தியமங்கலம் வட்டத்தில் இரண்டு இடங்களில் நீதிமன்றத்திற்காக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கரைநெகமம் பகுதியிலும், சத்தியமங்கலம் அரசு கலைக் கல்லூரி உள்ள இடத்திலும் சத்தியமங்கலம் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக

சத்தியமங்கலம் நீதிமன்றம் என்ற பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இரண்டு இடங்களிலும் உட்பிரிவு செய்யப்பட்டும், மாவட்ட நீதிபதி அவர்கள் நீதிமன்றம் அமைக்க அது பாதுகாப்பான இடம் இல்லையென்று கூறி இரண்டையும் நிராகரித்து விட்டார்கள். சத்தியமங்கலம் அரசு மருத்துவமனை அருகில் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறார் கூர்நோக்கு இல்லத்தில் 4 ஏக்கர் காலியிடம் உள்ளது. இவ்விடத்தில் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நீதிமன்றங்களுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 8 ஆண்டு காலத்தில் மட்டும் பார்த்தீர்களென்றால், நீதிமன்றங்களினுடைய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக இந்த அரசு 2,087 கோடி ரூபாயை செலவிட்டிருக்கிறது. அதன் காரணமாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுப்பதற்காக எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான் இந்தியாவிலேயே, நீதித் துறையிலே இன்றைக்குத் தமிழகம் முதல் மாநிலம் என்ற குறியீட்டைப் பெற்றிருக்கிறது. ஆகவே, நீதிமன்றங்களைக் கட்டிக் கொடுப்பதிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு எந்தவித தயக்கமும் இல்லை. ஈரோடு மாவட்டத்தில் 43 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதில் 39 நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சத்தியமங்கலத்திலே 3 நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தியூரில் ஒரு நீதிமன்றம் இயங்கி வருகிறது. ஆகவே, நீதிமன்றங்களைக் கட்டிக் கொடுப்பதிலே எந்தவித ஆட்சேபணையும், தயக்கமும் இந்த அரசுக்கு இல்லை. ஆனால்,

2020 ஜனவரி 8]

அந்தப் பகுதியிலே நீதிமன்றம் அமைப்பதற்குத் தேவையான இடத்தை மாவட்ட நிருவாகத்திடமிருந்து பெற்று, அந்த இடத்தை நீதித்துறைக்கு ஒப்படைத்த பின்னர், உரிய கருத்துரு அரசுக்கு வரும் பட்சத்தில், கண்டிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற சத்தியமங்கலத்தில் நீதிமன்றத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி தாலுகா உருவாகி 6 ஆண்டுகாலமாக செயல்பட்டு வருகிறது. சூளகிரி பகுதியிலே இருக்கின்ற காவல் நிலையத்தின் கட்டுப்பாட்டில் சூளகிரி, உத்தனப்பள்ளி, பேரிகை, பாகலூர் போன்ற கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களெல்லாம் ஒசூருக்குச் செல்ல வேண்டுமென்றால் 30, 40 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஆகவே, எங்களுடைய சூளகிரி தாலுகாவில் ஒரு நீதிமன்றம் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருப்பது போல, புதிய தாலுகாக்களில் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசினுடைய கொள்கை. உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையும் அதுதான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தக் கோரிக்கையின்படி, சூளகிரியில் புதிய நீதிமன்றம் அமைப்பதற்காக, வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், உயர் நீதிமன்றத்தின் கருத்துரு பெறப்பட்டு,*

அதற்கு வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், கண்டிப்பாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

நெல் கொள்முதல் நிலையம்

***52049—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, மரத்துறை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, மரத்துறை கிராமத்தின் அருகில் இருக்கின்ற 4 கிராமங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 2,661 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் மரத்துறை பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கோ அல்லது எங்கள் துறைக்கோ கோரிக்கை ஏதும் வரவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*